**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.100/2023
Sessions)

( Prosecution P.W.1
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | ஆசைத்தம்பி | -- | |
| Father's Name | ஏமராஜா | Calling | டயர் கம்பெனி |
| Village | இந்திராநகர் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of December 2025.

**Accused Present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் தாலுகா, இந்திரா நகர் வள்ளுவர் நகரில் குடியிருந்து வருகிறேன். இந்திரா நகரிலேயே ஆசை டயர் ஒர்க்ஸ் என்ற பெயரில் டயர் ரீ பட்டன் தொழில் செய்கிறேன். எனது மனைவியின் பெயர் மகேஸ்வரி. எங்களுக்கு துளசி தீபா என்ற மகளும், மாதவன் என்ற மகனும் உள்ளனர். விபத்து சமயத்தில் மாதவனுக்கு 14 வயதாக இருந்தது. 27.12.2022ம் தேதி நானும் எனது மனைவியும் மங்காபுரத்திற்கு சென்றிருந்தோம். எனது அண்ணன் மகன் ஆதித்தன் என்பவர் போன் மூலமாக என்னிடம் எனது மகன் மாதவனுக்கு திருவில்லிபுத்தூர்–மதுரை ரோட்டிலிலுள்ள ஐஸ்வர்யா மோட்டார்ஸ் கம்பெனி முன்பு ஒரு டேங்கர் லாரி அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வந்து எனது மகன் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாக என்னிடம் தெரிவித்தார். நானும், எனது மனைவியும் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்தோம். அங்கு வந்து பார்த்தபோது எனது மகன் மாதவனுக்கு வலது கை, வலது கால், வலது தோள்பட்டை, முழங்கால் ஆகிய இடங்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டு அவர் மயக்க நிலையிலும் பேசக்கூடிய நிலையிலும் இருந்தார். அருகிலிருந்த ஆதித்தன், வைரமுத்து, திருநாவுக்கரசு ஆகியோர்கள் உதவியுடன் அவ்வழியாக வந்த ஒரு ஆட்டோவில் எனது மகனை ஏற்றிக்கொண்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து எனது மகனுக்கு முதலுதவி சிகிச்சை செய்தார்கள். மற்றும் எனது மகனுக்கு ட்ரிப்ஸ் ஏற்றப்பட்டது. சிகிச்சை செய்து கொண்டிருந்தபோது எனது மகன் சிகிச்சை பலனின்றி பகல் 01.15மணியளவில் இறந்து போய் விட்டார்.

எனது மகன் ஏற்கனவே எங்களிடம் தான் இறந்துபோய் விட்டால் உறுப்பு தானம் செய்யவேண்டும் என்று சொல்லியிருந்தபடியால் அவனுடைய கண்களை மருத்துவர் மூலம் தானமாக வழங்கி விட்டோம். அதன் பின்னர் நடந்த சம்பவத்திற்கு நான் ஒரு புகார் மனு கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். எனது மகன் மீது மோதிய வாகனத்தை ஓட்டி வந்த நபர் வேல்முருகன் என்று தெரிந்து கொண்டேன். அவர் ஓட்டிவந்த பெட்ரோல் டேங்கர் லாரியின் பதிவெண் TN67AQ9027 என்றும் தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of December 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN Digitally signed by M VEERANAN Date: 2025.12.19 16:26:19 -0400

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**